செய்தி வெளியீடு எண்: 673 நாள்: 17.09.2018

# செய்தி வெளியீடு

கேரள மாநிலத்தில் ஆகஸ்ட் மாதம் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நியமன உறுப்பினர் ஆகியோரது ஒரு மாத சம்பளத்தின் மொத்தத் தொகையான ரூ. 1,13,20,000/–க்கான (ரூபாய் ஒரு கோடியே பதிமூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) வரைவோலைகள், கேரள அரசிற்கு அனுப்பும்பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களால் இன்று (17.9.2018) வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அரசு தலைமைக் கொறடா திரு.எஸ். இராஜேந்திரன், சட்டப்பேரவைச் செயலாளர் திரு.கே. சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9